அண்ணாமலை பல்கலைக்கழகம்
தொலைதூர மற்றும் இணைய வழிக் கல்வி மையம்
முதுநிலை சமூகவியல்
நான்காம் பருவம்

017T2440 – ஆய்வுத் திட்டப் பணிகளுக்கான வழிகாட்டுதல்கள்

சமூகவியல் முதுகலை படிப்பின் முதலாம் ஆண்டு காலத்தை முடித்த பின்னரே ஒரு மாணவர் ஆய்வுத் திட்டப் பணியை மேற்கொள்ள முடியும்.

ஆய்வுத் திட்டப் பணியின் நோக்கங்கள்

1. படிப்பை திட்டமிடும் வழிமுறைகள், தரவு சேகரிப்பு, பகுப்பாய்வு, விளக்க காட்சி மற்றும் சமூகம் தொடர்பான பிரச்சனைகள் பற்றி முடிவு எடுப்பது குறித்து மாணவர்களுக்கு வெளிப்படுத்துதல்.
2. மாணவர்கள் பலதுறை தத்துவார்த்த கருத்துக்களையும் கொள்கைகளையும் நிஜ வாழ்க்கையில் பயன்படுத்த உதவுதல்.
3. சமூகவியல் துறையில் நுண்ணறிவைப் பெறுதல் மற்றும் பிரச்சனைகள் எவ்வாறு அடையாளம் காணப்பட்டு தீர்க்கப்படுகின்றன என்பதை அறிந்து கொள்ளுதல்.

ஆய்வுத்திட்ட முன்மொழிவு சமர்ப்பிப்பு மற்றும் ஒப்புதல்

ஆய்வுத் திட்டத்தின் தலைப்பு மற்றும் ஆராய்ச்சி மேற்பார்வையாளரின் தேர்வை இறுதி செய்த பிறகு, மாணவர்கள் ஆய்வுத் திட்ட முன்மொழிவு விவரக் குறிப்புடன் ஆராய்ச்சி மேற்பார்வையாளரின் சுயவிவரத் தரவு மற்றும் ஆய்வுத் திட்டச் சுருக்கத்தையும் அனுப்ப வேண்டும்.

ஆய்வுத் திட்டச் சுருக்கம்

ஆய்வுத் திட்டத்தின் சுருக்கம், ஆராய்ச்சி மேற்பார்வையாளருடன் கலந்தாலோசித்ததன் அடிப்படையில் தயாரிக்கப்பட்டு இயக்குனர், தொலைதூர மற்றும் இணைய வழிக் கல்வி மையம், அண்ணாமலை பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர் – 608002 என்ற முகவரிக்கு பின்வரும் தலைப்புகளின் கீழ் அனுப்பப்பட வேண்டும்.

1. ஆய்வுத் திட்டத்தின் தலைப்பு
2. ஆய்வு பிரச்சினையின் அறிக்கை
3. ஆய்வின் நோக்கங்கள்
4. ஆராய்ச்சி முறைகள்

மேற்பார்வையாளரின் தகுதி

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது கல்லூரியில் சமூகவியல்/சமூகப் பணியில் முதுகலைப் பட்டம் பெற்று குறைந்தபட்சம் ஐந்து ஆண்டுகள் பணி அனுபவம் உள்ள ஆசிரியராக இருத்தல் வேண்டும்.

ஆய்வுத் திட்டப் பணியின் வடிவம்

1. திட்ட அறிக்கையில் 60 முதல் 120 வரையிலான இரட்டை இடைவெளியில் தட்டச்சு செய்யப்பட்ட பக்கங்கள் இருக்க வேண்டும்.
2. தங்களது ஆய்வுத் திட்ட அறிக்கை, ஆய்வுத் திட்ட கையேட்டில் பரிந்துரைக்கப்பட்ட கல்வித் தரத்திற்கு ஏற்ப அமைய வேண்டும்.
3. ஆய்வுத் திட்ட அறிக்கையில், ஆய்வுத் திட்டச் சுருக்கத்தின் நகல் இணைக்கப்பட வேண்டும்.
4. ஆய்வு திட்ட அறிக்கையில், ஆராய்ச்சி மேற்பார்வையாளரிடமிருந்து அசல் தன்மைக்கான சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்.

பொது வழிகாட்டுதல்கள்

1. ஆய்வுத் திட்ட அறிக்கையின் இரண்டு தட்டச்சு செய்யப்பட்ட பிரதிகள் தயாரிக்கப்பட்டு, அதில் ஒன்றை தொலைதூர மற்றும் இணைய வழிக் கல்வி மையத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.
2. ஆய்வுத் திட்ட அறிக்கைக்கு அந்தந்த ஆராய்ச்சி துறையில் நன்கு தேர்ந்த பொருத்தமான ஆராய்ச்சி மேற்பார்வையாளரை கண்டறிந்து ஆராய்ச்சித் தலைப்பை தேர்ந்தெடுப்பது மாணவரின் பொறுப்பாகும்.
3. முன்மொழியப்பட்ட ஆராய்ச்சி மேற்பார்வையாளர் இயக்குனரகத்தால் ஏற்றுக்கொள்ளப்படாவிட்டால், மாணவர் ஆராய்ச்சி மேற்பார்வையாளரை மாற்றுமாறு அறிவுறுத்தப்படலாம்.
4. ஒவ்வொரு மாணவருக்கும் வழிகாட்டுவதற்காக ஆராய்ச்சி மேற்பார்வையாளருக்கு ரூபாய் 200/- கௌரவ ஊதியமாக வழங்கப்படும்.
5. ஒரு ஆராய்ச்சி மேற்பார்வையாளர் ஒரு கல்வி ஆண்டில் தொலைதூரக் கல்வி இயக்குனரகத்தில் முதுநிலை சமூகவியல் பாடத்திட்டத்தில் 5 மாணவர்களுக்கு மேல் மேற்பார்வையிடக்கூடாது.
6. ஆய்வு திட்ட அறிக்கை லேமினேட் செய்யப்பட்ட ரேப்பர் போர்டுடன் பிணைக்கப்பட வேண்டும். சுழல் அல்லது வேறு எந்த வகையான பிணைப்பும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
7. சமர்ப்பிக்க பரிந்துரைக்கப்பட்ட படிவம் (நகல் இணைக்கப்பட்டுள்ளது) ஆய்வுத் திட்டப் பணியுடன் இணைக்கப்பட வேண்டும்.
8. ஆய்வுத் திட்ட முன்மொழிவு ஒப்புதல் கடிதத்தின் நகல் ஆய்வுத் திட்ட அறிக்கையுடன் இணைக்கப்பட வேண்டும்.
9. ஆய்வுத் திட்ட அறிக்கையில் ஆராய்ச்சி மேற்பார்வையாளரால் முறையாக கையொப்பமிடப்பட்ட சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்.
10. ஆய்வுத் திட்டப் பணி தொடர்பான அனைத்து விசாரணைகளும் கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

இயக்குனர்
தொலைதூர மற்றும் இணைய வழிக் கல்வி மையம்,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர் – 608002

ஆய்வுத் திட்ட முன்மொழிவை சமர்ப்பிக்க கடைசி தேதி: **30-10-2026**

ஆய்வுத் திட்ட அறிக்கையை சமர்ப்பிக்க கடைசி தேதி: **31-12-2026**

ஆய்வுத் திட்ட அறிக்கையை தாமதமாக சமர்ப்பிக்க கடைசி தேதி: **15-01-2027** (ரூபாய் 500/- தாமதக் கட்டணத்துடன்)

இயக்குனர்

அண்ணாமலை பல்கலைக்கழகம்
தொலைதூர மற்றும் இணைய வழிக் கல்வி மையம்
முதுநிலை சமூகவியல்
ஆய்வுத் திட்ட முன்மொழிவை அங்கீகரிப்பதற்கான படிவம்

சேர்க்கை எண்:

1. மாணவரின் பெயர் மற்றும் முகவரி :

2. ஆய்வுத் திட்டத்தின் பொருள் பகுதி :

3. ஆய்வுத் திட்டத்தின் தலைப்பு :

4. ஆராய்ச்சி மேற்பார்வையாளரின்
பெயர் மற்றும் அலுவலக முகவரி :
(தன்விவரக் குறிப்பு இணைக்கப்பட வேண்டும்)

மாணவரின் கையொப்பம் :
தேதி :

ஆராய்ச்சி மேற்பார்வையாளரின் கையொப்பம்
பெயர்:
கல்வி ஆண்டு:
மேற்பார்வையிடும் மாணவர்களின் எண்ணிக்கை:
(ஒரு கல்வியாண்டில் ஆராய்ச்சி மேற்பார்வையாளருக்கு 5 மாணவர்களுக்கு மேல் இருக்கக் கூடாது)

இணைப்பு: 1. ஆய்வுத் திட்டச் சுருக்கம்
2. ஆராய்ச்சி மேற்பார்வையாளரின் சுயவிவரத் தரவு

அலுவலகப் பயன்பாடு

சரிபார்த்தல் ஒப்புதல்

தலைமை - சமூகவியல் பகுதி

இயக்குநர்

அண்ணாமலை பல்கலைக்கழகம்
தொலைதூர மற்றும் இணைய வழிக் கல்வி மையம்
முதுநிலை சமூகவியல்
ஆராய்ச்சி மேற்பார்வையாளரின் சுயதகவல்கள்

ஆராய்ச்சி மேற்பார்வையாளர் புகைப்படம்

பெயர் :

கல்விதகுதி :

தற்பொழுது வகிக்கும் பதவி :

நிறுவனத்தின் பெயர் :

அனுபவம் :

அலுவலக முகவரி
தொலைபேசி மற்றும்
அலைபேசி எண்கள் :

வீட்டு முகவரி :

மேற்பார்வையாளரின் கையொப்பம்

அண்ணாமலை பல்கலைக்கழகம்
தொலைதூர மற்றும் இணைய வழிக் கல்வி மையம்
முதுநிலை சமூகவியல்
ஆய்வுத் திட்ட அறிக்கையின் அமைப்பு

1. அட்டை பக்கம்
2. தலைப்புப் பக்கம் (அல்லது) முதல் பக்கம்
3. மாணவரின் பிரகடனம்
4. ஆராய்ச்சி மேற்பார்வையாளரின் சான்றிதழ்
5. மாணவரின் பாராட்டு
6. பொருளடக்கம்
7. அட்டவணைகளின் பட்டியல்
8. புள்ளி விவரங்களின் பட்டியல்
9. ஆய்வுத் திட்டப் பணியின் உள்ளடக்கம்
    i) அறிமுகம்/முன்னுரை
    ii) முன் ஆய்வு மதிப்பாய்வு
    iii) ஆராய்ச்சி முறைகள்
    iv) பகுப்பாய்வு
    v) முடிவுரை
10. நூல் பட்டியல்
11. இணைப்புகள், ஏதேனும் இருந்தால்

இயக்குனர்

களப்பணி அறிக்கை சமர்ப்பித்தலுக்கான படிவம்
(களப்பணி அறிக்கை சமர்ப்பிக்கும் போது அத்துடன்
இணைக்கப்படவேண்டும்)

1. மாணவர் பெயர் :
2. பதிவு எண் :
3. பாடத்திட்டம் :
4. மாணவரின் முகவரி :
   (தொலைபேசி எண்ணுடன்)

மேற்பார்வையாளரின் பெயர் :

பதவி மற்றும் அனுபவம் :

மேற்பார்வையாளரின் முகவரி : 1.அலுவலகம்

2. வீடு

களப்பணி அறிக்கை சமர்ப்பிக்கும் தேதி:
தாமதமாக சமர்ப்பித்தால் அதற்கான அபராதத் தொகை செலுத்தியது பற்றிய விபரங்கள்:

மாணவரின் கையொப்பம்

மேற்பார்வையாளரின் கையொப்பம்

இடம் :
தேதி :

இயக்குநர்
தொலைதூர மற்றும் இணையவழிக் கல்வி மையம்(CDOE)